ISSN : 2455 - 0531

# இனம்

இனம் இனத்தைச் சேரும்

Mail Id: inameditor@gmail.com
editor@inamtamil.com

## பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

## International E-Journal of Tamil Studies

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர்:4 இதழ்:13 மே 2018

Vol. 4 Issue : 13 May 2018



IIJIF

INTERNATIONAL INNOVATIVE JOURNAL IMPACT FACTOR

DOI: 03-MAR-2018
REF.NO.: IIJIF180301

office@iijif.com
https://iijif.com/

This certicate is valid for 1 year from the date of issue

CERTIFICATE

OF INDEXING AND JOURNAL IMPACT FACTOR [2017-18]

THIS CERTIFICATE IS PRESENTED TO
Inam: International E-Journal of Tamil Studies

e-ISSN: 2455-0531

The above journal has been positively evaluated by our team in IIJIF Journal Impact Factor Evaluation Process.

Journal Impact Factor [JIF-2016-17] JIF : 2.321

MANAGER



ஆ.மணி
அ.மோகனா
இரா.இராஜா
கி.சங்கரநாராயணன்
ப.திருஞான சம்பந்தம்
மு.நாகராஜன்
விஸ்வேஸ்வரன்
மௌ.அஸ்கர் அலி
மா. உமாமகேஸ்வரி
சு.பேச்சியம்மாள்
கு.தனலெட்சுமி
அ.பிரீதா
மு.தமிழ்முல்லை

ரெ.அருணாதேவி
கு.சரஸ்வதி
இரா.வைதேகி
சி.யுவராஜ்
ந.மாலதி
இரா.பிரசன்னா
ப.மணிகண்டன்
ரா.ராஜராஜன்
நா.மலர்விழி
சே.செந்தமிழ்ப்பாவை
பெ.குபேந்திரன்
பெ.ராஜா
மா.ஆசியாதாரா
வி.மல்லிகா

இல.இராஜதுரை
க.தேவி
மீ.கோமதி
க.ரேவதி
வீ.மீனாட்சி
ம.பெட்ரிக் ஜெபராஜ்
ப.புவனேஸ்வரி
இரா.நித்யலெட்சுமி
சே.முனியசாமி
அ.அனேஜா
வி.வசந்தா
அ.புவியரசு
தி.நிரஞ்சனி
மா.யோகராஜ்
யே.டிலானி
மொ.சபீதாபானு
கா.தினேஷ்
ஆ.ஷைலா ஹெலின்
ம.சந்துரு
வசந்தமணி
பி.விஜி
த.சத்தியராஜ்
மா.பரமசிவன்

Inam ISSN : 2455 - 0531

# இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
An Internationally Refereed e_ Journal of Tamil Studies


## பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
முனைவர் த.சத்தியராஜ்

## ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)

## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (திருச்செங்கோடு)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் சி.இரவிசங்கர் (மதுரை)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (கேரளா)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)



## இதழாக்கமும் வெளியீடும்

முனைவர் த.சத்தியராஜ்
கோயமுத்தூர்
09600370671
inameditor@gmail.com
www.inamtamil.com


மே 2018 மலர் : 4 இதழ் : 13
May 2018 Volume IV Issue 13

# உள்ளே ...

தொகுதி - ஒன்று

## தமிழ்ச் செவ்வியல்


ஆறுமுக நாவலரின் திருமுருகாற்றுப்படைப் பதிப்பு : பத்துப்பாட்டுப் பதிப்பா?
முனைவர் ஆ.மணி | 4

பதினோராம் திருமுறை யாப்பு - பதிப்பு : சில குறிப்புகள்
முனைவர் அ.மோகனா | 12

யாப்பியலும் கணக்கியலும்
முனைவர் இரா. இராஜா | 19

வேற்றுமைகள் : மாற்றங்களும் வளர்ச்சிநிலையும்
முனைவர் கி.சங்கர நாராயணன் | 26

கீழ்க்கணக்கில் நேரிசை இன்னிசையாதல்
முனைவர் ப.திருஞானசம்பந்தம் | 34

முற்கால நீதிநூல்கள் சுட்டும் அரச முறைமையும் மக்களின் கடமைகளும்
முனைவர் மு.நாகராஜன் | 40

திருக்குறளில் 'ஆன்மா' என்ற கருத்துக் கூறப்படவில்லை
விஸ்வேஸ்வரன் | 45

தமிழர் சிந்தனை மரபில் அழகியலும் கலைகளும் : சங்க காலத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு
திரவியராசா நிரஞ்சினி | 53

சூழலியல் நோக்கில் சங்க இலக்கியம்
முனைவர் மௌ.அஸ்கர் அலி | 59

பழந்தமிழரின் இயற்கைப் பாதுகாப்பு முறைமைகள்
முனைவர் மா. உமா மகேஸ்வரி | 64

இனவரைவியல் நோக்கில் குறுந்தொகை
முனைவர் சு.பேச்சியம்மாள் | 69

பத்துப்பாட்டில் உழவும் நெல் விளைச்சலும்
கு. தனலட்சுமி | 75

பழந்தமிழரின் போர் முறைகள்
அ.பிரீதா | 79

முல்லைத்திணை - அகப்பொருள் வெளிப்பாடு
மு.தமிழ்முல்லை | 83


பொருநராற்றுப்படையில் கரிகாற்சோழனின் சிறப்புகள்
ரெ. அருணா தேவி | 87

சங்க இலக்கியம் சுட்டும் பழந்தமிழர் தொழில்வளம்
முனைவர் கு.சரஸ்வதி | 92

எட்டுத்தொகையில் குளவி (காட்டு மல்லிகை)
இரா. வைதேகி | 96

...

UGC APPROVED JOURNAL NO: 64244





**அகநானூற்றுப் பாடல்கள் காட்டும் தமிழரின் அகவாழ்க்கைச் சிறப்புகள்**
சி. யுவராஜ் | 99

**அகநானூற்றின் கட்டமைப்பு**
ந. மாலதி | 104

**குறுந்தொகை முல்லைத்திணையில் மரங்களும் மலர்களும்**
இரா. பிரசன்னா | 107

**நற்றிணையில் தூதும் மடலும் உணர்த்தும் செய்திகள்**
ப.மணிகண்டன் | 111

**குறுந்தொகை உணர்த்தும் அறம்**
முனைவர் ரா. ராஜராஜன் | 115

**நாலடியாரில் 'முதியோர்' பதிவுகள் உணர்த்தும் சிந்தனைகள்**
முனைவர் நா. மலர்விழி | 119

**சிலப்பதிகாரமும் அரும்பதவுரைகாரரும்**
முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை & பெ.குபேந்திரன் | 123

**சங்க இலக்கிய நெய்தல் திணைப் பாடல்களில் வரலாற்றுக் குறிப்புகள்**
பெ.ராஜா | 126

**வரலாற்று நோக்கில் இடையியல் அமைவுநிலை**
முனைவர் மா.ஆசியாதாரா | 130

**தொகுதி - இரண்டு**

## காப்பிய இலக்கியம்

**ஒப்பியல் நோக்கில் நளன் கதையும் கதைவடிவங்களும்**
முனைவர் வி.மல்லிகா | 136

**நளன்கதை கூறும் இலக்கியங்கள்**
Rajadurai.L | 140

## பக்தி இலக்கியம்

**ஆழ்வார் பாசுரங்களில் அரையர் சேவை**
க. தேவி | 144

**அட்டப் பிரபந்தத்தில் அணிநயம்**
முனைவர் மீ. கோமதி | 148

**ஆழ்வார் பாசுரங்களில் அணிநலன்கள்**
க.ரேவதி | 152

## தற்கால இலக்கியம்

**'தவுட்டுக் குருவி' எழுப்பும் கலகக்குரல்**
முனைவர் வீ.மீனாட்சி | 155

**சுஜாதாவின் விஞ்ஞானச் சிறுகதைகளில் தொடக்கம் - வளர்ச்சி - முடிவு**
ம.பெட்ரிக் ஜெபராஜ் | 159

**ரமணிசந்திரன் புதினத்தில் பெண் நிலைப்பாடு**
ப. புவனேஸ்வரி | 163

**தினமணி இதழும் தலையங்கமும்**
முனைவர் இரா. நித்யலட்சுமி | 167

## வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்

**முதுகுளத்தூர் சுப்பையாபிள்ளையின் புவனேந்திர காவியமும் அந்நூலுக்குச் சாற்றுக்கவி பாடியோரும்**
சே.முனியசாமி | 171

**பூகோளத்தின் புதிய சவாலாகும் மின்னணுக் கழிவுகள்**
அரியரெத்தினம் - அனேஜா | 182

**சீனாவின் முத்துமாலைத் திட்டத்தினால் (One Belt One Road) இலங்கையில் ஏற்படும் விளைவுகள் - பொருளியல் நோக்கு**
வினாயகமூர்த்தி - வசந்தா | 192

**சேரன்மாதேவி குருகுலத்தின் தொடக்கக்காலம்**
முனைவர் அ.புவியரசு | 203

**செயற்கைமுறை கருக்கட்டலினால் ஏற்படும் தாக்கங்கள் : ஓர் உளவியல் நோக்கு**
திரவியராசா நிரஞ்சினி & மா.யோகராஜ் | 213

**விசேட தேவையுடைய பிள்ளைகளும், விசேட வழிகாட்டல் ஆலோசனையும்**
யேசுஜயா டிலானி & மொகமட் கனீபா சபீதா பானு | 219

**வள்ளலார் வகுத்த இனம்**
கா. தினேஷ் | 230

**சர்வ சமய சமரசக் கீர்த்தனைகளின் அரசியல் பின்புலம்**
ஆ. ஷைலா ஹெலின் | 233

**வரைவிலக்கணங்கள்வழிக் கல்வி எனும் எண்ணக்கருவை ஆராய்தல்**
யேசுஜயா டிலானி | 238

**ஆரம்பப்பிரிவு மாணவர்களது கல்வி வளர்ச்சியில் ஆசிரியர்களின் வகுப்பறை முகாமைத்துவம் ஏற்படுத்தும் தாக்கம்**
Shandru Mariyadas | 254

**பண்டைய சிற்பக் கலையும் அலங்கார வளைவு முறைகளும்**
முனைவர் வசந்தமணி இராமலிங்கம் | 265

**கேரளப் பல்கலைக்கழகச் சுவடியியல் துறை - ஓர் அறிமுகம்**
பி.விஜி | 269

## நூல் மதிப்பீடு

**சொல் நிலம்: வெளிப்பாட்டுத் திறனுரை**
த.சத்தியராஜ் | 277

**வாழ்வியலறம் + பாலியலறிவு = பண்டைத்தமிழர்**
முனைவர் மா.பரமசிவன் | 286


...

மதிப்பிடப்பெற்றது

# பழந்தமிழரின் போர் முறைகள்

அ.பிரீதா
தமிழ் - முனைவர் பட்ட ஆய்வாளர்
பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 17.

சங்க காலத்தில் வீரம் முதன்மையாகப் போற்றப் பெற்றது. ஆடவரும், மகளிரும் இயற்கையிலேயே மறப்பண்பு மிக்கவராய் விளங்கினர். இதனால் இவர் 'மறவர்', 'மறக்குடி மகளிர்' என அழைக்கப் பெற்றனர். ஒவ்வொருவருக்கும் வகுக்கப்பட்ட கடமைகள் போரோடு தொடர்புடையனவாகவே அமைந்திருந்தன. சங்க காலத்தில் மறமே மிகுந்திருந்ததனால் எண்ணற்ற போர்கள் நடைபெற்றன என்பதனை இலக்கியங்கள்வழி அறிய முடிகிறது. போரானது பல்வேறு காரணங்களுக்காக நிகழ்ந்துள்ளது. அவ்வகையில் சங்க காலத்தில் வீரம் முதன்மையாகப் போற்றப்பட்டது. ஒரு சமுதாயத்தைப் பாதுகாக்கும் பொறுப்பினைஅரசன் கொண்டிருந்தான். அந்தச் சமுதாயம் அரசனையே நம்பி வாழ்ந்தது. அவ்வாறு நம்பி வாழ்கின்ற மக்களின் வாழ்க்கை வளமாக அமைய வேண்டும் என்று நினைத்த அரசன் அதற்காகத் தன்னுடைய படையைக் கொண்டு பிறநாட்டுடன் போர் மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே போருக்குச் செல்லும் வீரம் மிக்கவர்களே சிறப்பிற்குரியவர்களாகக் கருதப்பட்டனர்.

*ஈன்று புறந்தருதருதல் எம்தலைக் கடனே*
*சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே*
*வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே*
*நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே*
*ஒளிறுவாள் அருஞ்சமம் முறுக்கிக்*
*களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே* (புறம்.312)

எனும் புறநானூற்றுப் பாடல் பழந்தமிழரின் கடமைகளுள் சிலவற்றைக் குறிப்பிடுகின்றது. இப்பாடலில் குறிப்பிடப்பெறும் பெரும்பாலானோரின் கடமைகள் போரொடு தொடர்புடையனவாகவே அமைந்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

> *வீரமும் போர்ப்பண்பும் ஆடவர்க்குரிய இன்றியமையாப் பண்புகளெனச் சங்ககாலம் கருதியது. வீரநிலைக் காலத்தில் நிலவிய போர் விருப்பச் சமூகம் சங்ககாலத்திலும் நிலவியது.* (2007:107)

என்று கூறும் கு.வெ.பாலசுப்பிரமணியனின் கருத்து இங்கு உடன்வைத்து எண்ணத்தக்கது.

பழந்தமிழரின் பழக்கவழக்கங்கள், தொழில், விளையாட்டு ஆகியன யாவும் மறப்பண்புடன் திகழ்ந்துள்ளன. இதனை நோக்குங்கால் பழந்தமிழர் இயற்கையாகவே போர்க்குணம் படைத்தவராக விளங்கியிருக்கின்றனர் என்பதை அறிய முடிகின்றது. இவ்வாறு இயல்பாகவே மறத்தன்மை மிக்க பழந்தமிழர்கள் போர்களைப் பல முறைகளில் மேற்கொண்டுள்ளனர். அவற்றுள் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் பின்வரும் பகுதியில் விளக்கப்பெறுகின்றன.

### நிரை கவர்தலும் நிரை மீட்டலும்

ஒரு நாட்டு அரசன் தன் அண்டை நாட்டுடன் போர் மேற்கொள்ளக் கருதினால் பகைவர் நாட்டின் ஆநிரைகளைக் கவர வேண்டும் என எண்ணுவான். ஒவ்வொரு நாட்டவரும் தங்களின் எல்லையைப் பாதுகாக்கக் காவலர்களாகப் பலரை நியமித்திருந்தனர். அக்காவற்படைஞர் ஏராளமாக ஆடுமாடுகளை வளர்த்து வருவர். அவர்கள் ஆநிரைகளைப் பெருஞ்செல்வமாக நினைத்தனர். எனவே

அவர்கள் செல்வமாக நினைக்கின்ற ஆநிரைகளைத் தங்களுடைய மறவர்களை ஏவிக் களவு செய்து ஓட்டிக்கொண்டு வரச் செய்வர்.

*வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்*

*ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும்* (தொல்.புறத்.60)

இவ்வாறு ஆநிரைகளைக் கவர்வதால் இருநாட்டினர்க்கும் போர் ஏற்படும். இதனை வெட்சிப்போர் என்பர். ஆநிரைகளுக்குரியோர் அவற்றை மீட்க வரும்பொழுது அவர்களோடு போருக்குச் செல்வர். இவ்வாறு நிரைமீட்கப் போரிடுவது கரந்தைப் போர் ஆகும். இவ்வாறு ஆநிரைகளைக் கவர்தலையும் மீட்டலையும் போருக்குரிய ஒரு காரணியாகக் கொண்டிருந்தனர் பண்டைத் தமிழர்கள்.

**எல்லை விரிவாக்கம்**

பழங்காலத்தில் தமிழகத்தே இரு நாட்டிற்கும் இடையே எல்லையாகப் பெரிய நிலப்பரப்பில் மரம், செடி, கொடிகள் நிறைந்து காடுகளாக இருந்துள்ளன. தம் நாட்டு மக்கள் சிறப்பாக வாழ வேண்டும் என்றால் தம் நாடு பெரிதாகப் பரந்து காணப்பட்டால் சிறப்பாக இருக்கும் என நினைத்த வேந்தன் தம் அண்டை நாட்டின் செழிப்பான நிலப்பரப்பைத் தனதாக்கிக் கொள்ள எண்ணி, அந்நாட்டின் மீது போர் தொடுக்கத் தக்க காலம் பார்த்திருப்பான். அதற்கான காலம் வாய்க்கும்போது அந்நாட்டின்மீது தன்னுடைய படையைக் கொண்டு போர் மேற்கொள்வான். இவ்வாறு ஒருவன் மண்ணாசையால் பிற நாட்டின் மீது படையெடுத்துச் செல்லின், அந்நாட்டரசனும் தம் மண்ணை இழக்காமல் காத்தற்கு வருவான். இவ்வாறு அவ்விருவரும் மண்ணாசை காரணமாகப் போரிடுவது வஞ்சிப் போர் என்று கூறப்படுகின்றது. இதனை,

*எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்*

*அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே* (தொல்.புறத்.64)

எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

**அரண் முற்றுகை**

ஓர் அரசன் ஒரு நாட்டின்மீது படையெடுத்துச் சென்றால், எதிர்நிற்க இயலாத அந்நாட்டு மன்னன் தன் கோட்டைக் கதவுகளையடைத்து அதனுள் பாதுகாப்பாக இருந்து கொள்வான். படையெடுத்துச் சென்ற மன்னன் அந்நாட்டுக் காட்டையை முற்றுகையிடுவான். இதனை,

*முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்*

*அனைநெறி மரபிற்று ஆகும் என்ப* (தொல்.புறத்.66)

என்று உழிஞைப் போராகக் குறிப்பிடுவார் தொல்காப்பியர்.

பகைநாட்டு மன்னன் அஞ்சித் தன்னிடம் வந்து பணிந்து தனக்குக் கீழ் இருக்க வேண்டும் என்றால் அவனுடைய கோட்டையைக் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டு மன்னர்கள் இத்தகைய போர்முறையை மேற்கொண்டனர்.

இவ்வாறு பிற மன்னர்கள் தம் கோட்டையைக் கைப்பற்றிவிடக் கூடாது என்று மன்னர்கள் தம் கோட்டையைச் சுற்றி மதில்கள் அமைத்துப் பாதுகாத்து வருவர்.

*கோடுறழ்ந் தெடுத்த கொடுங்கள் இஞ்சி* (பதிற்.16.:1)

என்று கோட்டையைச் சுற்றி மதில்கள் அமைத்திருப்பதைப் பதிற்றுப்பத்துக் குறிப்பிடுகின்றது.

*மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்*

*காடும் உடையது அரண்* (குறள்.742)

மதிலுடன் கூடிய, கருநிறம் கொண்ட நீர்நிலையாகிய அகழியும் பரந்த வெளியும் உயர்ந்த மலைகளும் மரங்களடர்ந்த காடும் ஒரு நாட்டைப் பாதுகாக்கும் சிறந்த அரண்களாகும் என்று

திருவள்ளுவர் கூறுவதன்மூலம் மன்னர்கள் அரண் அமைத்துத் தங்களின் கோட்டையைப் பாதுகாத்தனர் என்பதனை உணர முடிகின்றது.

**வலிமையை நிலைநாட்டல்**

தமது வலிமையினை உலகம் புகழ்தலையே பெருமபொருளாக எண்ணுகின்ற இரு மன்னர்கள் எதிர்த்து ஓரிடத்தில் களம் குறித்துப் போரிடுவர். இதனைத் தும்பைத்திணை என்பர்.

*மைந்து பொருளாக வந்த வேந்தனைச்*

*சென்றுதலை அழிக்கும் சிறப்பிற் றென்ப* (தொல்.புறத்.76)

ஒத்த வலிமையுடைய இரு மன்னர்கள் போரிடுவதை இந்நூற்பாவானது குறிப்பிடுகின்றது. வலிமை மிக்க இரு மன்னர்கள் போரிடுவதால் இந்தப் பாரானது கடுமையான போராகக் கருதப்பெற்றது. இரு நாட்டு வளங்களும் அழிவைச் சந்திக்கின்றன.

*திசையிரு நான்கும் உற்கம் உற்கவும்*

*பெருமரத்து இலையில் நெடுங்கோடு பற்றவும்* (புறம்.4:4-5)

எட்டுத் திசையிலும் எரியும் கொள்ளியால் நெருப்புப் பற்றி எரிகின்றது. அதனால் பச்சை மரங்கள் பட்டுச் செழிப்பற்றுப் போயிருப்பது பற்றி இப்புறநானூற்றுப் பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

**கடற்போர்**

கடலில் கலம் செலுத்துவதில் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தனர் தமிழர்கள். வணிகத்திற்காகக் கட்டப்பட்ட கலங்கள் பின்னர்ப் போர்களுக்கும் பயன்படுத்தப் பெற்றன. சோழன் கரிகாற் பெருவளத்தானின் முன்னோர் கடற்போர் நிகழ்த்தியதை

*நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி*

*வளிதொழில் ஆண்ட உரவோன் மருக* (புறம்.66:1-2)

என வெண்ணிக்குயத்தியார் புறநானூற்றில் குறிப்பிடுகின்றார்.

*கோடுநரல் பௌவம் கலங்க வேலிட்டு*

*உடைதிரைப் பரப்பில் படுகட லோட்டிய* (பதிற்.46:11-12)

சங்குகள் ஒலிக்கும் கடல் கலங்கும்படி வேற்படையைச் செலுத்திப் பெரிய அலைகளைக் கொண்ட கடலை இடமாகக் கொண்டு போர் மேற்கொண்டு எதிரிகளை ஓடச் செய்து வெற்றி கொண்டவன் சேரன் செங்குட்டுவன் என்று பதிற்றுப்பத்துக் குறிப்பிடுகின்றது.

மேற்காண் இலக்கியங்கள் கூறும் சான்றினைப் பார்க்கும்பொழுது சங்க காலத்தில் கடற்போர் மேற்கொண்டு கடல் கடந்த நாடுகளைத் தமிழ்மன்னர் வெற்றி கொண்டுள்ளனர் எனத் தெரிகின்றது. சங்ககாலத்து மன்னர்கள் தரையில் களம் அமைத்துப் பாரிடுவது போன்று கடலிலும் சென்று போர் மேற்கொண்டுள்ளனர். சங்ககாலத்துப் போர்முறைகளுள் கடற்போரும் ஒன்றாக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**நிறைவுரை**

பண்டைத் தமிழர்கள் காதலையும் வீரத்தையும் இரு கண்களென மதித்துச் செயலாற்றியுள்ளனர். இயல்பிலேயே வீரம்(மறம்) மிக்குத் திகழ்ந்துள்ளவர் மறவர் எனப் பெயர் பெற்றுள்ளனர். பகைநாட்டு மன்னனுடன் போரிடக் கருதிய சூழலில் எவ்விதமான காரணமுமின்றி, முன்னறிவிப்பின்றிப் போர் செய்யும் செயலைப் பண்டைத் தமிழ் மன்னர்கள் மேற்கொள்ளவில்லை. மாறாக, பகைநாட்டு ஆநிரைகளைக் கவர்தல், பகைநாட்டு அரணை முற்றுகையிடல் என்பன போன்ற முன்நிகழ்வுகளைச் செய்துள்ளனர். அவையே வெட்சி, கரந்தை, நொச்சி, உழிஞை... என இலக்கணப்படுத்தப் பெற்றுள்ளன. கடல் கடந்தும் பண்டைத் தமிழ் மன்னர்கள் போரிட்டு வெற்றிக்கொடி நாட்டியதனைப் புறநானூறு உள்ளிட்ட இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

**துணைநூற்பட்டியல்**


- *கௌமாரீஸ்வரி எஸ்.(பதி.), 2014(13ஆம் பதிப்பு), தொல்காப்பியம் - பொருளதிகாரம் - இளம்பூரணர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை.*
- *பகலவன் ப.(உரை.), 2007(மு.ப.), திருக்குறள் உரை, கற்பகம் புத்தகாலயம், சென்னை.*
- *பாலசுப்பிரமணியன் கு.வெ., 2007, சங்க இலக்கியத்தில் புறப்பொருள், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை.*
- *மாணிக்கம் அ.(உரை.), 2012(மு.ப.), பதிற்றுப்பத்து, அறிஞர் அண்ணா நூற்பதிப்புக் கழகம், சென்னை.*
- *மாணிக்கவாசகன் (உரை.), 2012(ஆ.ப.), புறநானூறு, உமா பதிப்பகம், சென்னை.*